


தண்டி யாத்திரை தினத்தை முன்னிட்டு, கும்மிடிப்பூண்டியில் பிளாஸ்டிக் விழிப்புணர்வு பேரணி நடந்தது. காந்தி வேடமிட்ட மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### தண்டி யாத்திரை தினம்

# பிளாஸ்டிக் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி

**கும்மிடிப்பூண்டி, மார்ச் 13:** தண்டி யாத்திரை தினத்தை முன்னிட்டு பிளாஸ்டிக் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி கும்மிடிப்பூண்டியில் நடந்தது.

காந்தி அடிகள் 1930 மார்ச் 12ம் தேதி தண்டி யாத்திரை நடத்தினார். தண்டி யாத்திரை தினத்தை முன்னிட்டு, கும்மிடிப்பூண்டியில் பிளாஸ்டிக் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி நேற்று நடந்தது.

ஆதர்ஷ் வித்யா பள்ளி மாணவ, மாணவிகள் 78 பேர் காந்தி வேடமிட்டு கதர் தொப்பி, கதர் சட்டை அணிந்து பேரணியாக வந்தனர்.

'பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதால் புவி வெப்பமடைகிறது. அதனால் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய் ஏற்படுவதை தவிர்க்க பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதையும், அதை எரிப்பதையும் தவிர்க்க வேண்டும். பூமியின் எதிர்காலம் நம் கையில், பிளாஸ்டிக் உபயோகத்தை குறைப்போம், நம் குழந்தைகளுக்கு நல்ல உலகை விட்டு செல்வோம்' போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி சென்றனர்.

கும்மிடிப்பூண்டி பைபாஸ் சாலையில் தொடங்கிய பேரணி, பஸ் நிலையம், பஜார்வீதி வழியாக ரெட்டம்பேடு சாலையில் முடிந்தது.

காந்தி உலக மைய நிறுவனர் ராஜேஷ், நிர்வாக இயக்குனர் விஜயலட்சுமி, அறக்கட்டளை நிர்வாகிகள் பிரமோத் ஜெயின், திலிப்குமார், ஷியாம் சுந்தர் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

### குன்றத்தூர் பகுதி மக்கள் குமுறல்

# இன்ஸ்பெக்டர்- போலீசார் இடையே பனிப்போரால் கொள்ளை அதிகரிப்பு

## உயரதிகாரிகள் தலையிட கோரிக்கை

**பூந்தமல்லி, மார்ச் 13:** குன்றத்தூர் பகுதியில் சமீபகாலமாக திருட்டு, வழிப்பறி சம்பவங்கள் ...

விடுமுறையில் சென்று விடுவதாக கூறப்படுகிறது. இதனால் பாதுகாப்பு பணிக்கு ...

வழிப்பறி சம்பவங்கள் நடந்துள்ளன.

...